பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

25 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
லாலா சோப்
அச்சுவேலி
(கி1903)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 12 வியாழக்கிழமை (25-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 37

# முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி 3 அதிகாரி உட்பட 11 படையினர் பலி

(கொழும்பு)

தென்மராட்சி முகமாலைப் பகுதியில் நிலக் கண்ணிவெடி வெடித்ததில் மூன்று அதிகாரிகள் உட்பட 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 5 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் சனத் கருனாரத்தின தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இரவு திடீரென இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் போது முகமாலைப் பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குக்கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களாக வடக்குக் கிழக்குப் பாடசாலைகளில் கடமையாற்றுவோருக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந் நியமனத்தில் மூன்று வருட சேவை மூப்பும், ஆசிரியர் சேவைக்கான அடிப்படைத்தகுதிக்கு அமையவும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் நியமனங்கள் தொடர்ப

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானத் தீர்வு; யுத்த நிறுத்த அறிவிப்பு

# அரசியல் தீர்வில் புலிகள் நாட்டம்

# அரசுக்கு சர்வதேச அழுத்தம் தீவிரம்!

## யுத்தநிறுத்த அறிவிப்பை அரசு வெளியிடும்?

(நமது அரசியல் நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியான அமைப்பாக இருந்தாலும் ஜனநாயக ரீதியான அரசியல் அமைப்பாக செயல்பட ஆரம்பித்திருப்பது சமாதான முயற்சிகளுக்கு நம்பிக்கையை ஊட்டுவதாக இருப்பதுடன் அவர்களின் நடவடிக்கை பாராட்டக் கூடியதுமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தியபின் விடுதலைப்புலிகள் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 24ம் திகதி விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த ஒருதலைபட்சமான் யுத்தநிறுத்த அறிவிப்பு நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைய இருந்தநேரத்தில் மேலும் ஒரு மாதகாலயுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது பலரது பாராட்டுக்கும் உள்ளாகியுளளது.

### யுத்தநிறுத்தம் நோர்வே மூலம் அறிவிப்பு

விடுதலைப்புலிகள் தமது யுத்தநிறுத்த அறிவிப்பை நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

### உத்தியோகபூர்வ அறிவிப்பு

நோர்வேத தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இலண்டன் சென்று அரசியல் ஆலோசகர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# குமண, கிரிந்தவில் பொருள் ஏற்றப்படுகிறது!

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தில் தரித்துநிற்கும் கப்பல்களில் வடபகுதிக்கான உணவுப் பொருட்களை ஏற்றும்பணி நேற்றுமுதல் மீண்டும்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துறைமுகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குமண, கிரிந்தஆகிய இரு கப்பல்களிலும் வடபகுதிக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் துரிதமாகஏற்றப்பட்டுவருவதாகவும் கூடிய விரைவில் இருகப்பலும் உணவுப்பொருட்களுடன்வடபகுதி வந்தடையும் என்றும் துறைமுகவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

## பிரிட்டனில் புலிகளை தடைசெய்க

# இலங்கை இந்தியா கூட்டாக கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைபயங்கரவாத அமைப்பாகக்கருதி அதனைபிரிட்டன் தடைசெய்ய வேண்டும்.

இவ்வாறு இலங்கைஇந்தியா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக இணைந்து பிரிட்டனிடம் கோரிக்கைவிடவுள்ளனர்.

இதேவேளை அடுத்தமாதமளவில் அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஐச்சந்திக்கவுள்ள பிரிட்டிஷ்பிரதமர் ரொனிபிளேயர் விடுதலைப் புலிகளின் விவகாரம்பற்றிப் பேசுவார் எனவும் வெளிநாட்டு இராஜதந்திரவட்டாரங்கள செய்திவெளியிட்டுள்ளன. (ந)

## விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் ஒட்டுவெளிப் பகுதியில் படையினரால் பாலியல் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தியபின் படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 11 தமிழ் கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பை உருவாக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதானமுயற்சிகளுக்கு சர்வதேசரீதியான அழுத்தங்களை அதிகரிக்கச் செய்வதில் ஈடுபட்டுள்ள 11 தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்த கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் முறையிலான கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது

11 தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்த கூட்டமைப்பு ஒன்று அவசியம் தேவை என உணரப்பட்டுள்ளதால் இக் கூட்டமைப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தமிழ்க்கட்சி வட்டாரங்கள்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# சீனக் கப்பலில் புலிக் கொடி

## காலித் துறையில் பரபரப்பு

(கொழும்பு)

காலித்துறைமுகத்தில்தரித்து நின்ற சீனக் கப்பல் ஒன்றில் புலிக் கொடி காணப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கப்பலுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபன கொள்கலனைக் கொண்டு சென்றவர்கள் எரிபொருளை நிரப்பிவிட்டு கை துடைப்பதற்காக கப்பலில் கிடந்த துணியை எடுத்த போது அந்தத்துணி புலிச்சின்னத்துடன் காணப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து காலித்துறை முகத்தில் நின்ற கப்பல்கள் யாவும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ந-5)

# புலிகளை பிரிட்டன் தடைசெய்தால் பாரதூரமான விளைவு ஏற்படும்

## மனித நேய அமைப்புகள் தூதருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடை செய்யும் முயற்சியில் ஈடுபடுமானால் அது பாரதூரமானதகாதவிளைவுகளை ஏற்படுத்தும்.

பிரித்தானிய உயர் ஸ்தானிகர் லிண்டா டபில்ட்டிற்கு யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று அனுப்பிவைத்த கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசு தடை செய்யக்கூடாதென்பதைவலியுறுத்தியுள்ள அக் கடிதத்தில் மேலும்குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்வது. தொடர்பாக தமிழ் மக்களின் கருத்துக்களை அறிவதில், தங்களது பிரித்தானிய அரசு ஆர்வமாக உள்ளதென்பதை செய்தி ஊடகங்கள் மூலமாக அறிகிறோம்.

ஆனால் இவ்விடயத்தில் தங்களது அரசு நிதானத்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பகிஷ்கரிப்பு போராட்டம்

(ஏறாவூர்)

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று பிரதேச தமிழ் மாணவர்கள் கடந்த திங்கள் முதல் பாடசாலைகளுக்குச் செல்லாது, பகிஷ்கரிப்புப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத்தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 150773 ஏ | 176936 ஏ |
| 178640 ஏ | 178664 ஏ |
| 178679 ஏ | 178826 ஏ |
| 178826 பி | |

### நெடுந்தீவு

| | |
|---|---|
| 13939 ஏ | 13939 பி |
| 14313 ஏ | 14313 பி |
| 14313 சி | 14313 டி |
| 14313 ஈ | 14313 எவ் |
| 14313 ஜி | 14454 பி |
| 14455 ஏ | 14455 பி |
| 14455 சி | 14496 ஏ |
| 14496 பி | 14504 ஏ |
| 14504 பி | 14512 ஏ |
| 14512 பி | 14512 சி |
| 14512 டி | 14512 ஈ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 178070 ஏ | 178070 பி |
| 178070 சி | 178289 ஏ |
| 178353 ஏ | 178359 ஏ |
| 178359 பி | 178361 ஏ |
| 178386 ஏ | 178386 பி |
| 178386 சி | 178391 ஏ |
| 178391 பி | 178391 சி |
| 178400 ஏ | 178426 ஏ |
| 178426 பி | 178412 ஏ |
| 178443 ஏ | 178443 பி |
| 178443 சி | 178465 ஏ |
| 178465 பி | 178495 ஏ |
| 178495 பி | 178496 ஏ |
| 178496 பி | 178496 சி |
| 178496 டி | 178497 ஏ |
| 178500 ஏ | 178500 பி |
| 179818 ஏ | 179828 ஏ |
| 179828 பி | 179828 சி |
| 179828 டி | 179830 ஏ |
| 179830 பி | 179833 ஏ |
| 179833 பி | 179843 ஏ |
| 177846 ஏ | 179850 ஏ |
| 179863 ஏ | 179892 ஏ |
| 179905 ஏ | 179905 பி |
| 179975 ஏ | 179976 ஏ |
| 179976 பி | 179976 சி |
| 179986 ஏ | 179986 பி |
| 187440 ஏ | |

### ஊர்காவற்றுறை

| | |
|---|---|
| 13260 ஏ | 13944 ஏ |
| 13944 பி | 13944 சி |
| 14146 ஏ | 14338 ஏ |
| 14373 ஏ | 14373 பி |
| 14383 ஏ | 14383 பி |
| 14382 சி | 14383 டி |
| 14412 ஏ | 14413 ஏ |
| 14426 ஏ | 14426 பி |
| 14426 சி | 14426 டி |
| 14428 ஏ | 14428 பி |
| 14428 சி | 14429 ஏ |
| 14433 ஏ | 14433 பி |
| 14434 ஏ | 14434 பி |
| 14438 ஏ | 14438 பி |
| 14447 ஏ | 14447 பி |
| 14447 சி | 14447 டி |
| 14452 ஏ | 14452 பி |
| 14452 சி | 14462 ஏ |
| 14464 ஏ | 14465 ஏ |
| 14467 ஏ | 14468 ஏ |
| 14468 பி | 14470 ஏ |
| 14479 பி | 14473 ஏ |
| 14483 ஏ | 14483 பி |
| 14485 ஏ | 14485 பி |
| 14485 சி | 14485 டி |
| 14486 ஏ | 14486 பி |
| 14486 சி | 14486 டி |
| 14489 ஏ | 14497 ஏ |
| 14497 பி | 14510 சி |
| 14510 டி | 14510 ஈ |
| 14514 ஏ | 14514 பி |
| 14517 ஏ | 14518 ஏ |
| 14518 பி | 14519 ஏ |
| 14519 பி | 14520 ஏ |
| 14525 ஏ | 14533 ஏ |
| 14533 பி | 14533 சி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 178335 ஏ | 178335 பி |
| 179915 ஏ | 179915 பி |
| 179915 சி | 179915 டி |
| 179915 ஈ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 172105 ஏ | 173715 ஏ |
| 173715 பி | 178163 ஏ |
| 178259 ஏ | 178412 ஏ |
| 178412 பி | 178474 ஏ |
| 179917 ஏ | 179917 பி |
| 180082 ஏ | 169193 ஏ |
| 169193 பி | 169193 சி |
| 178690 ஏ | 178735 ஏ |
| 179029 ஏ | 179044 ஏ |
| 179108 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 176683 ஏ | 176683 பி |
| 177012 ஏ | 177011 பி |
| 177012 சி | 178678 ஏ |
| 178722 ஏ | 178820 ஏ |
| 178973 ஏ | 179114 ஏ |
| 179114 பி | 179115 ஏ |
| 179115 பி | 179115 சி |
| 179115 டி | 179115 ஈ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 160474 ஏ | 160474 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 178666 ஏ | 178666 பி |
| 178808 ஏ | 178808 பி |
| 178808 சி | 178808 டி |
| 178809 பி | 178809 சி |
| 178810 ஏ | 178810 பி |
| 178810 சி | 178810 டி |
| 178814 ஏ | 178814 பி |
| 178817 ஏ | 178885 ஏ |

### வேலணை

| | |
|---|---|
| 14245 ஏ | 14363 ஏ |
| 14370 ஏ | 14370 பி |
| 14470 சி | 14370 டி |
| 14370 ஈ | 14410 ஏ |
| 14410 பி | 14410 சி |
| 14410 டி | 14410 ஈ |
| 14410 எவ் | 14442 ஏ |
| 14442 பி | 14442 சி |
| 14542 டி | 14448 ஏ |
| 14448 பி | 14453 ஏ |
| 14453 பி | 14453 சி |
| 14453 டி | 14453 ஈ |
| 14453 எவ் | 14453 ஜி |
| 14454 ஏ | 14457 ஏ |
| 14460 ஏ | 14460 பி |
| 14469 ஏ | 14473 பி |
| 14475 ஏ | 14475 பி |
| 14477 ஏ | 14477 பி |
| 14478 ஏ | 14488 ஏ |
| 14488 பி | 14488 சி |
| 14490 ஏ | 14490 பி |
| 14494 ஏ | 14498 ஏ |
| | 14494 பி |
| 14498 பி | 14498 சி |
| 14499 ஏ | 14505 ஏ |
| 14510 ஏ | 14510 பி |
| 14511 ஏ | 14515 ஏ |
| 14516 ஏ | |

## செயற்குழு தெரிவு

(அரியாலை)

யாழ் மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது புதிய வருட செயற்குழு தெரிவு இடம்பெற்றது.

நடப்பாண்டுத் தலைவராக வி. பாலசிங்கமும் செயலாளராக எஸ். சிறீகாந்தனும் பொருளாளராக வி.கே. சண்முகலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக ஐவரும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஐவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முறை தலைவர் பதவிக்கு பலத்த போட்டி நிலவியமை குறிப்பிடத்தக்கது.

(உ-106)

## மரதன் ஓட்டம்

(சுன்னாகம்)

யாழ் மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டியின் ஒரு அங்க விளையாட்டாகிய மரதனோட்டம் எதிர் வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மல்லாகம் சந்தியில் இருந்து ஆரம்பித்து சுன்னாகம், கந்தரோடை, மாசியப்பிட்டி, அளவெட்டியூடாக மீண்டும் மல்லாகம் சந்தியில் முடிவடையும். (உ-25)

## கும்பாபிஷேக கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவில் ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக முன் கிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மு.ப. 9 30 மணி முதல் 10.30 மணிக்குள் சுக்கிர ஹோரையில் கும்பாபிஷேக கிரியாரம்பம் தொடர்ந்து விநாயக வழிபாடு, அனுக்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், கணபதி ஹோமம் நவக்கிரஹ ஹோமம், நூதன மூர்த்திகளின் பூர்வாங்க கிரியைகள் நயனோன் மீலனம் முதலிய இடம்பெற்று பி.ப 2.00 மணிக்கு கிராமசாந்தி, பிரவேசபலி, ராஷோக்ன ஹோமம் திசாஹோமம், வாஸ்து சாந்திஎன்பன இடம் பெறும். (உ)

★ ★ ★

(அரியாலை)

கன்னாதிட்டி காளி கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பௌர்ணமி நாளன்று காலை 6 மணி தொடக்கம் 7.56 வரையுள்ள சுபநோத்தில் நடைபெறவுள்ளது

6 ஆம் திகதி காலை 6 மணி முதல் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும். கடந்த ஒரு வருடகாலமாக இக்கோயிலில் திருத்தப்பணிகள் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-061)

★ ★ ★

சுன்னாகம் அருள்மிகு சுந்தர ஆஞ்சநேய கோயில் நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் முன் கிரியைகள் இன்று ஆரம்பமாகிறது

இன்று மு.ப 9 30 மணியளவில் விநாயக வழிபாடு முதலிய பூர்வாங்க கிரியைகள் இடம்பெற்று, பி.ப. 4 மணியளவில் பிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம் முதலாக தைலாப்பியங்கம் வரையிலான கிரியைகள் இடம்பெறும். (உ)

## ஆண்டு விழா

(சங்கானை)

வலி மேற்கு களவத்துறை சன சமூக நிலையத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு களவத்துறை வைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என் திரிலோகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (உ-ப-18)

## கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை யா/புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 10 மணி தொடக்கம் 12 மணி வரை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் பயிற்றப் பட்ட மாவட்ட மட்ட பயிற்சியாளர்களினால் மேற்படி கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (உ-75)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்க 47 வது வருடாந்த பொதுக்கூட்டம்வரும்ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி 9 மணிக்கு யாழ். அரசினர் பொது வைத்தியசாலை புதிய வெளிநோயாளர் பிரிவில் சி. பாக்கியலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ-12)

## கோப்பாயில் கல்வியியற் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கல்வியியற் கல்லூரி மீண்டும் இன்று முதல கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இயங்கவுள்ளது.

கடந்த ஆண்டில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகளால், பாதுகாப்பு காரணங்களைக் கருத்திற் கொண்டு மே மாதம் 9 ஆம் திகதி முதல் கல்வியியற் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கி வந்தமை தெரிந்ததே. (உ)


வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு

**இளைஞர் சபை நடத்தும்**

## மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மிகம்

# கண்காட்சி

1 குலம் அது மனிதகுலம்.
மதம் அது அன்பெனும் மதம்.
பாஷை அது இருதய பாஷை.
கடவுள் அவர் எங்கும் இருக்கிறார்.

இடம்: யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
காலம்: 26 - 01 - 2001 வெள்ளி,
27 - 01 - 2001 சனி.

காலை 9-00 மணி, மாலை 5-00 மணி

[பிரவேசம் : இலவசம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இளைஞர் சபை
வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு.

(கி-1350)



யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## வாடகை வீடு

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையினர் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு தேவையாகவுள்ளது. கொக்குவில் தெற்கு, கொக்குவில் கிழக்கு மற்றும் திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி தெற்கு பிரதேசங்களாகவும், பல்கலைக் கழகத்திற்கு ஒரு மைல் சுற்றாடலிலும் அமைந்திருப்பது விரும்பத்தக்கதுவாடகை பற்றிய விபரங்கள் நேரிலே கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பதிவாளர்,யாழ். பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(கி-1913)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

| பூவுலகில் | | விநாயகர் பாதத்தில் |
|---|---|---|
| 1933-11-11 | | 2000-12-26 |

அமரர்

**திருமதி. சிவஞானப்பூங்கோதை நடராஜா (கோட்டை)**

ஆண்டு, விக்கிரமாதி ஆனதொரு மார்கழியில்
தூண்டு பிரதமைத் தோய் திதியில்-பூண்டதொரு
கொள்கையால் பூங்கோதை பரராசசேகரன்
தான் போற்றும்
வாழ்வதனைப் பெற்றாள் இனிது.

தகவல்
அன்பு மகன்
ந. ஸ்ரீமான்
(கிராம அலுவலர்)
இணுவில் தென் மேற்கு,
ஜே/188

குப்பிளான்

(கி-1912)

# வெற்றி தோல்விகளைத் தாங்கும் பண்பே தலைமைத்துவத்திற்குத் தனிச் சிறப்புத்தரும்

பரந்த அறிவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், சமரசமாக தீர்வு காணக்கூடிய தன்மையும், பொறுமையும், சாதுரியத்துடன் மக்களிடம் அணுகும் தன்மையும் கொண்ட செயற்பாடுகளே தலைமைத்துவப் பண்புகளாகும்.

**மனப்பக்குவம்**

வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு ஒப்ப ''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற வழியிலே பண்புடன் செயற்பட வேண்டும், விடயங்கள் எல்லாவற்றையும் செவிமடுத்து, அதில் சரியான விடயத்தை தேர்ந்து எடுக்கும் மனப்பக்குவம் இருக்க வேண்டும். இயன்றவரை எல்லோருக்கும் சமநீதி கிடைக்கக் கூடியதாக செயற்பாடுகளை முன் எடுத்தல் வேண்டும்.

தலைமைத்துவம் வகிப்பவர் உதவியாளர்களை பங்காளிகளாக, பொறுப்பைக் கொடுத்து, செயற்படச் செய்து, செயற்பாட்டில் பிழைகள் ஏற்படும் தறுவாயில் பொறுமையுடன் அணுகி, அவற்றைச்சுட்டிக் காட்டி திருத்தமான வழிகளைக் காட்டிக் கொடுத்தல் வேண்டும். பழி வாங்குதல் அல்லது ஒருதலைப்பட்சமான தீர்ப்பு வழங்குதல் போன்ற விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டியனவாகும். குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் பொறுப்புக்களைக் கொடுக்காது எந்தெந்த துறைகளில் யார்யாருக்கு ஆற்றல் இருக்கின்றதோ அவர்களுக்கு உரிய பொறுப்புக்களைக் கொடுத்து செயற்பாடுகளைப் பரவலாக்குதல் வேண்டும். தலைமைத்துவம் உடையவர் எல்லா ஆற்றல்களையும் தெரிந்து இருத்தல் அவசியமாகும். தெரியாத பட்சத்தில் அத்துறைகளில் தேர்ச்சி பெற்றோரிடம் அணுகி அவர்களைக் கொண்டு உரிய நடவடிக்கைகளை விளங்க வைக்க வழி வகுக்க வேண்டும்.

**பெரியோர் வழியில்**

தலைமைத்துவத்தைப் பின்பற்றும் பொழுது எமக்கு வாழ்ந்து காட்டிய பெரியார்கள், தலைவர்கள், கல்விமான்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களின் சிறப்பான பண்புகளையும் உயர்வுப்பாதைகளின் வழிகளையும் பின்பற்றுவதன் மூலம் சிறப்பான நிலையை அடைய முடியும்.

பிரச்சினைகளை அணுகி அவற்றிற்கு எவ்வாறு சரித்திர வாயிலாக தீர்வு காணப்பட்டிருக்கின்றது. என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். உறுதியும், நேர்மையும் தலைமைத்துவத்தின் இரு கண்களாக இருக்க வேண்டும். தனக்கு மேற்பட்டவர்களிடம் தாராளமான முறையில் அணுகி நன்மதிப்பைப் பெறுதல் வேண்டும்.

**மூ. நடராஜா**
உடற்கல்வி ஆசிரியர்,
(யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

''தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும்'' என்பதற்கு ஒப்ப செயற்பட வேண்டும்.

**பாடசாலை மட்டத்தில்**

மேற்படி விடயங்களை நம் பாடசாலை மட்டத்தில் இருந்தே கற்றுக்கொள்ள வேண்டும் பாடசாலையில் நடைபெறும் மன்றச் செயற்பாடுகள், கருத்தரங்குகள், கலைநிகழ்வுகள், ஒன்றுகூடல்கள், விளையாட்டு நிகழ்வுகள் போன்றவற்றில் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுக்கல் வேண்டும்.

**விளையாட்டுத்துறை**

இவைகளை யாவற்றிலும் பார்க்க விளையாட்டுத் துறையை எடுத்தால் அவற்றிலே ஒரு அணிக்கு தலைமை தாங்கி அந்த அணிக்கு சிறந்த பயிற்சியைக் கொடுத்து, பயிற்சியாளரின் கருத்துக்களையும், நுட்பங்களையும் அறிந்து சிறப்பாக செயற்படல் வேண்டும். உடற்பயிற்சிக் குழுவினை எடுத்தால் அங்கு தலைமைத்துவத்தின் கட்டளைக்கு செயற்படல் ஒத்திசைவாக்கம், கட்டுப்பாடு, சீரான செயற்பாடுகள் போன்றவற்றை வளர்க்க முடியும். விளையாட்டுத்துறை மூலம் பாடசாலைமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டம் இப்படியாக படிப்படியாக பலதரப்பட்ட நிலைகளில் விளையாடும் போது சகல மக்களையும் சந்திக்கும் வாய்ப்பும், அங்கு ஒவ்வொருவருடனும் பழகும் வாய்ப்பும் எல்லோரது பண்புகள் பழக்கவழக்கங்களையும் பார்த்து அதில் சிறந்த வழிகளை நாம் பின்பற்றக்கூடிய சந்தர்ப்பங்களையும் விளையாட்டுத்துறையின் தலைமைத்துவத்தில்இருந்து பெறக்கூடிய வாய்ப்பாக அமைகின்றது ஏனைய துறைகளிலும் பார்க்க விளையாட்டுத் துறைத் தலைமைத்துவம் மேலும் மேம்படுத்தி நிற்கின்றது என்பதை தெளிவாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

மனித வாழ்க்கையில் சீரான தலைமைத்துவத்தை பெறுவதற்கு விளையாட்டுத் துறையில் குழு விளையாட்டுக்கள் முதன்மை வகிக்கின்றது. விளையாட்டுத்துறையில் தலைமை தாங்கும் போது வெற்றி தோல்விகளைத் தாங்கும் இயல்பை வளர்க்க முடிகின்றது போட்டி இருக்க வேண்டும். பொறாமை அகற்ற வேண்டும். சிறப்பான முறையில் தலைமைத்துவத்தை பாடசாலைக் கல்வியைக் கற்கும் காலத்திலிருந்தே வளர்க்க வேண்டும். இவ்வாறுவளர்த்து வாழுவோமானால் நாமும, நமது நாடும் சிறப்படையும் என்பது வெள்ளிடைமலையாகும்.

## இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

44 1/1 ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணிமனை கடந்த 22 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம்வீரசிங்கம் கட்டடத்தின் 3 ஆம் மாடிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொறுப்பு வருமான வரி உத்தியோகத்தர் ப. ஜெயராஜா அறிவித்துள்ளார்.

அத்துடன் வரி செலுத்துனர்கள் இனிமேல் புதிய விலாசத்துடனேயேதொடர்புகளை வைக்குமாறும் கேட்டுள்ளார்.

(உ-9)

## இராசி பலன்

25-01-2001
(தை 12, வியாழன்)
பிரதமை மு.இ 8 58 வரை
திருவோணம் மு.இ 7.58 வரை
ராகுகாலம் 2.06- 3 36
சுபநேரம் 8.06- 9 36
சித்தம்.

**மேடம்**
காரியம்கைகூடும், தொழில் மேன்மை, அதிகாரம், பணச் சங்கடம்.

**இடபம்**
கட்டுப்பாடு, பிரயாணம், உடல் உபாதை, பயந்த சுபாவம்.

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை, கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காரிய தாமதம், வியாதி.

**கடகம்**
வாகன வசதி, விருந்துபசாரம், காரிய ஜெயம், தன வரவு.

**சிங்கம்**
பகைவர்விலகுவர், நோய் குணமடையும், காரிய ஜெயம், புதிய முயற்சி.

**கன்னி**
நினைத்த இடம் செல்ல தடங்கல், அமைதிக்குறைவு, புத்திரரால் கவலை, சிறு வியாதி.

**துலாம்**
உறவினர் மனஸ்தாபம், தடுமாற்றம், காரியதாமதம், உஷ்ணரோகம்.

**விருச்சிகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தனவரவு, சகோதரர் உதவி, இனிய அனுபவம்.

**தனுசு**
வாக்குக் கலகம், தனவிரயம், கௌரவக் குறைவு, மனக்கவலை.

**மகரம்**
உஷ்ணரோகம், ஆழ்ந்த சிந்தை, புதியபொருள் சேர்க்கை, சுவாரஸ்யம்.

**கும்பம்**
பிரயாணம், கோபப்படுதல், காரிய தாமதம், பண விரயம்.

**மீனம்**
நன்மையான காரியம், தன லாபம், குடும்பசுகம், சந்தோசம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## கோண்டாவில் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(ஆவரங்கால்)

கோண்டாவில் பகுதியில் திருடர்கள் கைவரிசை மேலோங்கியிருப்பதாக அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்த வகையில், இம்மாதம் 16 ஆம் திகதியன்று கோண்டாவில்காளிகோவிலடியைச் சேர்ந்த நடேசன் என்பவரின் வீட்டின் ஜன்னல்களைப் பிரித்து உட்புகுந்து பத்திரமாக வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி உள்ளிட்ட 27 தங்கப் பவுண் நகைகளையும் ஆயிரக்கணக்கான பணத்தையும் களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் மிருசுவில் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து கோண்டாவில் கிழக்கில் வசித்து வந்த ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் வீட்டிற்குள் புகுந்து 2 தாலிக்கொடிகள் உட்பட 40 பவுண் நகைகளையும் 7 ஆயிரம் ரூபா பணத்தினையும், பெறுமதிமிக்க உடைகளையும் கையாடிச் சென்றுள்ளனர்.

இவ் இரண்டு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகவும் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-57)

## மீண்டும் கைது

(யாழ்ப்பாணம்)

கணபதிப் பிள்ளை ரஞ்சித்குமார் என்ற உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞரை இராணுவத்தினர் மீண்டும் கைது செய்து விடுவித்திருப்பதாய் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேற்படி நபர் 17 ஆம் திகதி விடுவிக்கப்பட்டார் என்றும் 3 தினங்களின் பின் மீண்டும் கைது செய்யப் பட்டு மறுதினம் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-12)

பொங்கல் கவிதைப் போட்டி முடிந்த பின் வந்து சேர்ந்த கவிதைகளில் சிலவற்றினைத் தருகின்றோம்.



## தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

நாற்றிசையும் வெடிமுழக்கம் அகதிகளாய் அலைகின்றோம்
இருப்பதற்கு குடிசையின்றி நடுத் தெருவில் அலைகின்றோம்
வீடு வீடாய் பிச்சை கேட்டு நாய்களாக அலைகின்றோம்
தொலைந்து போன தமிழர்களை புதைகுழியில் காண்கின்றோம்
இனிமேலும் பட்ட துயர் வேண்டாம் தைமகளே!
நாட்டில் அமைதி, சாந்தி சமாதானமோங்கி
புதியதோர் வாழ்வைத்தர இரண்டாயிரத் தொன்றில் பிறக்கின்ற
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ.

**அரியகுமார் யசிகரன்**
தாழையடி.

* * *

மண்ணிழந்து மனமழிந்து மாண்புமிகு இனமழிந்து
கண்ணிழந்து காலிழந்து கனதுயரம் பட்டு நொந்து
வண்ணமுற வாழ்ந்திருந்த வழமான வாழ்விழந்து
சிந்தையில்லா மந்தையராய் சீரழிந்து போகாமல்
தை பிறந்தால் வழிபிறக்கும் தமிழர்தம் துயர் பறக்கும்
மெய் வரட்டும் பல் குழலின் முழக்கங்கள் முடிந்து விடும்
உய்வெமக்கு வந்து விடும் சொல்லெய்யும் துணையிருக்க
தை மகளே! தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ!

**சி. கௌசல்யா**
வல்வெட்டித்துறை.

* * *

செந்நிறக் குருதியில் வெந்து மடியும் சேய்களின்
சோகங்கள் சொந்தங்களாய் வந்துதித்த தைமகளே
சகதிகள் சங்கதிகளாய்த் தொடராமல்
தமிழர் எமக்கு தாராயோ விடிவுதனை.

வெட்டியும் வெட்டாமலும் வெந்திடும் பிணங்களாய்
தள்ளியும் தள்ளாமலும் தள்ளாடும் எம்மினம்
சாடுகின்ற சாபங்கள் சரிந்து தான் போய் விட
தைமகளே விடிவுதான் தாராயோ!

**செல்வி கோபாலன் தெய்வலோசினி**
கரணவாய், கரவெட்டி

* * *

தைமகளே தமிழர்க்கு விடிவு தனைத் தாராயோ
மெல்லவே தமிழரிங்கு சாகும் நிலை பாராயோ
பொய்யாகிப் போனதுவே பாரினிலே எம்வாழ்வு
மெய்யாக உன்வரவுமேதினியில் எமைக்காக்க

தையவள் வந்தாள் தமிழர்க்கு விடிவாம்
செப்பிய மாந்தர் மொழியதைக் கேட்டு
நம்பியே உன்னை நாடி நின்றனே
தலைமகள் நீயும் விடிவினைத் தாராய்.

**கவிஞன் ஜெயஸ் கொண்டார்**

* * *

விடிவு விடிவு என்று விக்கித்து நிற்கும் – தமிழர்க்கு
பொழுது விடியும் பொழுது
விடிவு கொண்டு வாராயோ – தைமகளே!

கடிது கடிது தான் எம் மினத்திற்கு விடிவு
அதனால் – பொழுது விடியும் பொழுது
விடிவு கொண்டு வாராயோ – தைமகளே!

புதை குழிகள் புதுக்கப் புதுக்க
எத்தர்கள் எம்மினத்தை ஏதிலிகள் ஆக்கையிலே
புத்தம் புது மகளே எப்பொழுது விடிவம்மா!

**என். வனிதா (சுதா)**
வட்டுக்கோட்டை.

# செய்தித் துளிகள்

## ஷெல் வீச்சில் ஒருவர் காயம்

(மந்திகை)

கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் செவ்வாய் காலை ஏழு மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இப்பகுதிக்கு விறகுபொறுக்கச் சென்றபளைஅரசர்கேணியிலிருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் அல்வாய் கிழக்கில் வேலுப்பிள்ளை விநாயகம் (வயது48) என்பவரே காயமடைந்தவராவர்.

இவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-23)

## விழிப்புணர்வு நாடகங்கள்

(ஈச்சமோட்டை)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விழிப்புணர்வுப் பாசறையில் நாடகங்கள் பலவும் அரங்கேற்றப்பட்டன.

அப் பிரதேசத்தினுள் ஐந்து பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து மனித முன்னேற்ற நடுநிலயத்தினரின் விழிப்புணர்வுக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் விழிப்புணர்வுப் பாசறையில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கலந்துகொண்டனர்

நிகழ்ச்சியில் மனித முன்னேற்ற நடுநிலய இயக்குநர் அருட்தந்தை சி. ஜி ஜெயக்குமார் அடிகளாரும் இணைப்பாளர் ஜோசப்பாலாவும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

இதில் 15ற்கு அதிகமான மாணவர்களின் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

## காணாமற் போனவர் மீண்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் காணாமற் போனதாக கூறப்பட்ட மானிப்பாய் இளைஞர் ஒருவர் வீடுதிரும்பியுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வருடம் பங்குனி மாதம் 2 ஆம் திகதியன்று, மேற்படி சேதுநாதன் காண்டீபன் (வயது 25) என்ற இளைஞரைக் காணவில்லையென உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நபர் தற்போது வீடு திரும்பியுள்ளதாக தாயாரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## காய்ச்சலால் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் மரணமானார்.

சுதுமலை மானிப்பாயைச் சேர்ந்த வரப்பிரகாசம்-நிரோஜன் (வயது-20) என்பவரே மரணமானவர் ஆவார். (உ-104)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலைய சேவைப் பகுதியினரால் கடந்த 21ம் திகதி கல்வியங்காடு கலட்டிப் பிள்ளையார் கோயில் சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்பரவாக்கப்பட்டது.

இதில் முப்பது இளைஞர்கள் பங்கு கொண்டனர். (உ-104)

## கும்பாபிஷேகம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் வரும் 29 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (உ-75)

## மஹோற்சவம்

(கோப்பாய்)

நீர்வேலி வடகோவை பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சாந்தி துர்க்கா ஆலய சாந்திக மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் இடம்பெறும். 5 ஆம் திகதி திங்கட் கிழமை காலை நீர்வேலி கிராம வலமும் மாலை கோப்பாய் கிராம வலமும் இடம் பெறுவதுடன் மறுநாள் மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளதாக ஆலயத்தின் அறங்காவலர் தெரிவித்துள்ளனர். (உ-79)

## பொங்கல் விழா

தேசிய இளைஞர்சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பொங்கல் திருநாள் நிகழ்வு அண்மையில் உடுவில் இளைஞர் கழகப் பிரதேச சம்மேளனத்தினரினால் இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வு உடுவில் இளைஞர் கழகப் பிரதேச சம்மேளனத்தின் தலைவர் எஸ். பிஷ்மன் தலைமையில் இடம் பெற்றது. இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரி. சிவதெட்சணமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (உ-75)

## மூடை விழுந்து காயம்

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''இந்துருவலி'' கப்பலிருந்து பொட்ருகளை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

உர மூடை தவறி விழுந்ததனால் கரவெட்டியை சேர்ந்தநவரட்ணராஜா ஜெகதீஸ்வரன் (வயது23) என்பவரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ 23)

## விபத்தில் காயம்

காங்கேசன்துறை வீதியில் இணுவில் வைத்தியசாலைக்கு அண்மையில் செவ்வாய்யன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்விபத்தில்சிக்கி தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பிரதமகுருவின்மகன் சபாநாதசர்மா படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-23)

## விரைவில் நிவாரணம்

(ஆவரங்கால்)

தை மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் வரும் 26 ஆம் திகதிக்கிடையில் நிவாரணக் கொடுப்பனவு ஆரம்பமாக விருப்பதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்படி நிவாரணத்தைவழங்கிமுடிக்க வேண்டி இருப்பதனால், அதற்கான பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிய வந்துள்ளது. (உ-57)

# இல. ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஆணைக்குழுக்கள் அமைப்பது அவசியம்

## சிங்கப்பூர் மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு பொதுச் சேவை ஆணைக்குழு ஆகிய மூன்று ஆணைக்குழுக்களையும் அமைக்க வேண்டுமென சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டம்கடந்தவெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவரான வில்லியம் கேக்கின் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. இக் கூட்டத்தில் இலங்கையில் நிலவும் ஜனநாயக அச்சுறுத்தல் குறித்து பேசியதைத் தொடர்ந்தே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரித்தானிய எதிர்க் கட்சித் தலைவர் வில்லியம் கேக்கைச் சந்தித்து இலங்கையின் நிலவரம் குறித்து எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜன உதான வீடமைப்புத் திட்டம் 75 வீதம் பூர்த்தி

(ஈச்சமோட்டை)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஜன உதான வீடமைப்புத் திட்டத்தில் 2000ஆம் ஆண்டு வரை 75 வீதமான வேலைகள் திருப்திகரமாகப் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள எட்டுப் பிரதேசசெயலகங்கள் ஒவ்வொன்றிலும் 100 குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவற்றில் 75 வீதமான வீடமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ள போதிலும் பளை, சாவகச்சேரி, கோப்பாய் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் 50 வீதமானவையே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

மேலும் புனர்வாழ்வு, புனரமைப்பின் நிதி உதவியுடன் சேதமடைந்த வற்றை புனரமைப்புச் செய்வதற்காக 217 குடும்பங்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ - 59)

## யாழ்.மாநகரசபைப்பகுதியில் பிளாஸ்ரிக் உறையினால் காவலிடப்பட்ட வயர்கள்

### மக்களின் பாதுகாப்புக் கருதியாம

[அச்சுவேலி]

யாழ். மாநகரசபைக்கு உள்ளிட்ட பகுதிகளில் மின் விநியோகத்திற்கென நிறுவப்பட்டிருந்த மின்சார கேபிள்கள் கழற்றி அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக பிளாஸ்ரிக் உறையினால் காவலிடப்பட்ட வயர்கள் இணைக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்பகுதிகளில் காணப்படும் நெருக்கமான மற்றும் வீதிக்கரையை மிக அண்மித்த குடியிருப்பாளர்களின் நலன் கருதியியே அவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் இப் புதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாய் தெரியவந்துள்ளது

இவ்வாறு கழற்றி அகற்றப்படும் மின்சார கேபிள்கள் குடாநாட்டின் மின் விநியோகம் ஏற்படுத்தப்படாத இடங்களுக்குப் பயன்படுத்தப்படலாம் எனவும் கருதப்படுகிறது.

இதேசமயம், மேற்படி புதிய வயர் இணைப்பு சட்டவிரோத மின்சாரம் பெறுவோர்க்கு சாதகமாக அமையாது எனவும் கருத்து நிலவுகிறது. (உ-14)

## வழக்கு விசாரணை மார்ச் 5க்கு ஒத்திவைப்பு

(பண்டாரவளை)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 19பொலிஸார் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்கு நேற்று முன்தினம்விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மனித உரிமைகள் மீறல் வழக்கின் பிரதிவாதிகள் பிரதி மனுத்தாக்கல் செய்ய வேண்டுமென நேற்று உயர் நீதி மன்றம் அறிவித்துள்ளதுடன் இவ் வழக்கு விசாரணைஎதிர்வரும் மார்ச் மாதம் 5ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## திருச் சொரூபத் திறப்பும் திருவிழாத் திருப்பலியும்

(ஈச்சமோட்டை)

நீண்டகாலமாக வழிபாடுகள் இன்றி காணப்பட்ட கொட்டடி புனித ஜோசவ்வாஸ் தேவாலயத்தின் திருநாள் திருப்பலி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

திருவிழாவிற்காக முன்ஆயத்தமாக 5 நாட்கள் தொடர் வழிபாடுகள் இடம் பெற்று வந்தது. இவற்றை அருட்தந்தை ஸ்ரனிஸ்ரன் அடிகளார் முன்னின்று நடத்தினார்.

திருவிழா தினத்தன்று ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வீதி ஓரமாக புனித ஜோசவ்வாஸ் அவர்களின் திரு உருவச் சிலை யாழ். ஆயரினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் பல இடங்களிலிருந்தும் பொது மக்கள் வந்து கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

## கூட்டுறவு ஊழியருக்கு நஷ்டஈடு 2லட்சத்து 70ஆயிரம்ரூபா வழங்கநீதிமன்றுஉத்தரவு

(கொழும்பு)

மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிய எஸ். அருளானந்தம் என்பவர் தன்னை சங்கம் சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கம் செய்ததாகக் கூறி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் கொடுக்கப்பட்ட நஷ்டஈடு தொடர்பான ஏற்பாடுகளில் உயர் நீதிமன்றம் மாற்றங்களைச் செய்துள்ளது.

மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 1978 ஆம் ஆண்டுதொடக்கம் வர்த்தக முகாமையாளராக கடமையாற்றிவந்த இவர் 1994 ஆம் ஆண்டு சங்கத்தினால் கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

இதனைஎதிர்த்துப் பிரதேச தொழில் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த வழக்கில் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரியில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மனுதாரருக்கு மொத்தம் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 112 ரூபா வழங்கப்பட வேண்டும் என்றுஉத்தரவிடப்பட்டது.

இந்த தீர்ப்பில் வழங்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையை ஆட்சேபித்து அருளானந்தம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இறுதியாக உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பில் முதல் வருடத்தில் மாதமொன்றுக்கு 3ஆயிரத்து 218 ரூபா வீதமும் இரண்டாம், மூன்றாம் வருடங்களுக்கு 3 ஆயிரத்து 750 வீதமும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 4 ஆயிரத்து 215 ரூபா வீதமுமாக 2இலட்சத்து 69 ஆயிரத்து 862 ரூபாவை அருளானந்திற்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த நஷ்டஈட்டுத் தொகையில் இருந்து 9 ஆயிரத்து 654 ரூபாவைக் கழித்து வழங்கப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றத்தின்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணிகளான வே. விமலராஜா எம்.ஏ எம் சலாம் ஆகியோரும் அருளானந்தம் சார்பில் சட்டத்தரணி எஸ். சின்னத்தம்பியும் ஆஜராகினர். (உ- 5)

## மாணவர் கவனத்திற்கு

இலவசப் பாடநூல் மற்றும் இலவச சீருடைகளை விநியோகிப்பதற்கு மாணவர்களது பெயர் விபரங்கள் தேவையாக இருப்பதால் யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் கல்வி பயின்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் தமது பெயர் விபரங்களை யாழ்/இருநயக் கல்லூரியில் நேரில் வந்து பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் ந. தியாகராஜா அறிவித்துள்ளார். [உ-41]

யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# நகைச்சுவையால் வளமானவர்

இங்கிலாந்து தேசத்தின் தலை நகரம் இலண்டன். அந்தப் பெரிய நகரத்தில் ஏழைகள் மிக நெருக்கமான சிறிய குடிசைகளில் வசிப்பார்கள். அப்படியான ஒரு சிறுகுடிசையில் ஓர் ஏழைக் குடும்பம் வசித்து வந்தது. அந்தக் குடும்பத்தில் ஒரு சிறுவன் பிறந்தான். அவனின் தந்தை அளவுக்கு மிஞ்சிக் குடிப்பான். குடும்பம் பட்டினியால் வாடும். குடிகாரனான அவனுடையதந்தை குடியினாலேயே செத்துப் போனான். விதவைத் தாயினால் அவனுக்குச் சாப்பாடு போட முடியவில்லை.

தாயிருந்தும் அவன் அனாதையானான். வேளாவேளைக்குச் சாப்பாடு கிடைக்கவில்லை. பல சமயங்களில் பசியால் வாடினான். இந்த நிலையில் அந்தச் சின்னஞ்சிறு வயதில் அவன் வேலை தேடி அலைந்தான். முடிவெட்டும் கடையில் வேலை கிடைத்துச் சிலகாலம் சவரத் தொழில் செய்து வந்தான். அந்த வேலை அவனுக்குப் பிடிக்கவில்லை. சவரத் தொழிலை விட்டுவிட்டுப், பொம்மைக் கடையில் வேலையாளாகச் சேர்ந்தான். அவனுக்குக் கிடைத்த கூலி சாப்பாட்டிற்கே போதவில்லை இதன் காரணமாகச் சில சமயங்களில் திருடினான். அப்பொழுது அவனுக்கு ஏழே ஏழு வயதுதான்.

அவனுக்கு நடனமாடுவதில் விருப்பமிருந்தது. நடனம் கற்று, அதனையே ஒரு பிழைக்கும் வழியாகக் கொண்டான் ஒரு நாள் ஓர் ஊரில் நாடகமொன்று நடைபெற்றது. அதில் அவன் ஒநாயாக நடித்தான். அவனது நடிப்பு நன்றாக அமைந்து விட்டது. இருப்பினும் பசியைப் போக்கும் வழி கிடைக்கவில்லை ஏழ்மையின் காரணமாக அவன்பாடசாலைக்கேசென்றதில்லை. நிரந்தரமான வேலையெதுவும் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு நாடகக்கூட்டத்தாருடன் ஒரு தொழிலாளியாகச் சேர்ந்தான். இந்தச் சம்பவத்திலிருந்து அவனுடைய வாழ்க்கையிலே பெரியதோர் மாறுதல் ஏற்பட்டது.

அந்த நாடகக் குழு நல்ல பிரசித்தமாக இருந்தது அவர்கள் அமெரிக்காவிற்குச்சென்று பல நாடகங்களை நடத்திப் புகழ்பெற்றார்கள். அந்த நாடகங்களில் நடிக்க அவனுக்குஞ் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவனை நல்ல நகைச்சுவை நடிகரென்று பலரும் பாராட்டினர். பசியால் வாடிய அவனுக்குப் பணமும் வந்தது. புகழும் கிடைத்தது. அப்பொழுதுதான் மௌனப் படங்கள் எடுக்க ஆரம்பித்திருந்தார்கள் அந்த மௌனப் படங்களிலே நடித்துப் பெரும் பணமும், புகழும் சம்பாதித்தான். விஞ்ஞானப் புதுமையினால், மௌனப் படங்களுக்குப் பதிலாக பேசும் படங்கள் வந்தன. பேசும் படங்களிலும் நடித்தான். உலகின் சிறந்த நகைச்சுவை நடிகன் என்று புகழ் பெற்றான். அவனைப் போன்ற நகைச் சுவை நடிகர் தோன்றியதில்லை என்று உலகம் அவனைப் போற்றுகின்றது.

சார்லி சப்ளின், நகைச்சுவையால் மக்களைக் களிப்புறச்செய்தவர் ஆழ்ந்த கருத்துக்களை நகைச் சுவையுடன் வெளியிடுவார். உலக சமாதானத்தை விரும்புபவர். இவர் கோடி சீமானாகச் சுவிட்ஸர்லாந்தில் விளங்கினார்.

நன்றி
இளமைப் பருவத்திலே

ஓரே இரவில்

# இரு வீடுகளில் திருடர் யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் 2 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இரு வீடுகளில், திருடர்கள் ஒரே இரவில் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி விடிகாலை வேளை, மேற்படி பகுதியில் அமைந்துள்ள ''போரூட்'' நிறுவன பணியாளர் ஞானசீலன் என்பவரது வீட்டுக் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள், அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் மற்றும் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்

பின்னர், அதே வீதியில் அமைந்துள்ள வேலணை வைத்தியர் இராசரத்தினம் என்பவருடைய வீட்டுச் சமையலறைக்குள் நுழைந்த திருடர் உள்ளே செல்ல முடியாது போகவே அங்கிருந்த குளிர்சாதனப் பெட்டியில் இருந்த முட்டைகளை குடித்து விட்டுச் சென்றுள்ளதாய் தெரிய வந்துள்ளது. (உ-104)

# 250 வீடுகள் அமைக்கும் புதிய திட்டம் நடைமுறை

(ஈச்சமோட்டை)

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டில் இருநூற்றைம்பது புதிய வீடுகளை அமைக்கும் திட்டத்தை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்த உள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தினுள் அமைக்கப்படவுள்ள இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு வீட்டுக்கும் 90 ஆயிரம் ரூபா கட்டம்கட்டமாக வழங்கப்படவுள்ளது.

இவ்வீடமைப்பு வேலைகளில் அம்மக்கள தமதுமனித வலுவைப் பயன்படுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது,

இவ் வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து அரச அதிபரினால் 12 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்நிதியை வீட்டுக் கூரைகள் புனரமைப்புக்காக ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியில் 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும்.

அத்துடன் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால்ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு தகரக்கூரைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்துள்ளார். (உ-59)

# வீதி திருத்தம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம்- நல்லூர் டச்சு வீதி நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் திருத்தம் செய்யப்பட்டு தார் ஊற்றும் பணி இடம் பெற்று வருகின்றது. (உ-14)

# கிளைக்குழுத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் எதிர்வரும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு ப 10மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

2000ஆம்ஆண்டு மேமாதம் நடைபெறவேண்டிய மேற்படி கிளைக்குழுத் தேர்தல், நாட்டின் சூழ்நிலை கருதி ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உ-104)

# கதிர்காமர் ரஷ்யா பயணம்

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் நான்குநாள் விஜயம்ஒன்றைமேற்கொண்டு ரஷ்யாசென்றுள்ளார் ரஷ்யா சென்றுள்ள கதிர்காமர்அங்கு வெளியுறவு அமைச்சர் ஐவர் இஹனோவுடன் இராணுவ உதவிகுறித்து பேச்சுநடத்துவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த18வருடங்களின்பின் ரஷ்யாவிற்கு செல்லும்இலங்கையின் முதலாவது வெளி உறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்என்பதுகுறிப்பிடத்தக்கது இதேவேளை, கடந்த ஒக்டோபரில் இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் ஐக்கியநாடுகள் சபையியின் 55வது பொதுக் கூட்டத்தில் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தமைதெரிந்ததே.

# நான்கு நாட்களில் முடிவு

(கொழும்பு)

நான் அமைச்சராக தொடர்ந்தும் இருப்பதா இல்லையா என்பது இன்னும் நான்கு நாட்களில் தெரிந்துவிடுமென உள் நாட்டு வெளிநாட்டுவர்த்தகவாணிபகப்பல் துறை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வில், கடற்றொழில் மீன்பிடி சட்ட மூல ஒழுங்கு விவாதத்தின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (உ-9)

# தொடர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புவியியற் பொதுக்கலை, சிறப்புக்கலை மாணவர்களின் ஆய்வு அறிவை மேம்படுத்துவதற்காக ஆய்வுமுறையியல் பற்றிய தொடர் கருத்தரங்கு பிரதி புதன்கிழமை தோறும் முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் செ. பாலச்சந்திரன், பேராசிரியர் கா. குகபாலன், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் கலாநிதி எஸ். ரி. பி. இராஜேஸ்வரன், கலாநிதி ஏ. எஸ் சூசை, திரு. கே. சுதாகர் ஆகியோர் ஆய்வுமுறையியல் சார்ந்த பல்வேறு தலைப்புகளின் கீழ் விரிவுரைகளை வழங்கவுள்ளனர். (உ)

அரியாலை பொதுக் கிணறுகள்

# துப்பரவு செய்ய மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப்பகுதியில் உள்ள பொதுக்கிணறுகளை இறைத்துத் துப்பரவு செய்வதென யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளது.

செவ்வாயன்று, மாநகர சபை உறுப்பினர் கந்தையன் தலைமையில் சுகாதாரக் கூட்டம் இடம் பெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த பல மாதங்களின் பின் அரியாலைப் பகுதியில் மீளக்குடியேறிய பொதுமக்கள், பொதுக்கிணறுகளை இறைத்து சுத்தம் செய்து தர வேண்டும் என கோரியிருப்பது தொடர்பாக மாநகரசபை உறுப்பினர் கந்தையன் தெரிவித்தார்.

இத்னையடுத்து சுகாதாரக் குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்து பொதுக்கிணறுகளை இலவசமாக இறைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானம் குறித்த அறிக்கை பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (உ-12-59)

# போர் நடவடிக்கையால் 80 இளைஞர் கழக செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(ஈச்சமோட்டை)

கடந்தகால போர்நடவடிக்கைகளால் மூன்று செயலர் பிரிவுகளுக்குட்பட்ட எண்பது இளைஞர் கழகங்களின்செயற்பாடுகள் முற்றாகஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

தென்மராட்சி, பளை, யாழ் நகர் கரையோரப் பகுதிகளை அண்டிய கழகங்களே இவ்வாறு ஸ்தம்பிதமடைந்த நிலையில்காணப்படுகின்றன.

இதனால் இளைஞர் சேவைகள் மன்றத்திடமிருந்து பெற வேண்டிய பல நன்மைகளை இக் கழகங்கள் இழக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இடம் பெயர்ந்த கழக அங்கத்தவர்கள் பல்வேறு இடங்களிலும் சிதறி வாழ்வதனால் அவர்களை ஒன்றாக இணைத்துமீண்டும்செயற்பட வைப்பதில் பெரும் சிரமங்கள் எதிர் நோக்கப்பட்டுவருகின்றது.

ஆயினும் தற்போது பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் மீளக் குடியமர்ந்த பகுதிகளிலுள்ள கழகங்களைப் புனரமைப்புச் செய்யவும். இடம் பெயர்ந்து வாழும் கழக அங்கத்தவர்களை குறிப்பாக தென்மராட்சி, பளைப் பிரிவினரை வடமராட்சிப் பகுதியில் ஒன்று சேர்த்து கழக புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கழக அங்கத்தவர்கள் மேலதிக விபரங்களைப் பெற யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தை நாடலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-59)

# மேலும் பத்துப் பேருக்கு பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 10 பேருக்கு பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம்வழங்கப்பட்டுள்ளது

சிறி சந்திர வதனா ஜோகராஜ, துவாரகை வரணி வடக்குவரணி (கரம்பொன் சிறிபுஸ்ப்ப மகளிர் கல்லூரி)

நடராச கிருபாகரன், அராலி தெற்கு வட்டுக் கோட்டை (புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியா சாலை)

அழகரட்ணம் கமலச்செல்வி, சுதுமலை தெற்கு மானிப்பாய் (வேலணைசேர்வைத்திலிங்கம் (துரைச்சுவாமிவித்தியாலயம்)

ஞானலோயினி சதாசிவம், 15 சிவகுருநாதன் லேன் கஸ்த்தூரியார்வீதி யாழ்ப்பாணம் (புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை)

கதிர்காம நாதன் சுதர்சன், கலட்டி கரணவாய் கிழக்கு கரவெட்டி (மன்னார்)

பரமநாதன் குமர குருபரன், எழாலை மேற்கு சுன்ன ாகம் (மன்னார்)

சச்சிதானந்தசிவம் ஞானதரன், சந்தை வீதி உடுப்பிட்டி (மன்னார்)

சரவணை வசந்தராசா, ஐயனார் கோவிலடி மல்லாகம் (மன்னார்)

செ. யசிந்தா, புன்னாலைக் கட்டுவன் சுன்னாகம் (வவுனியா)

சிவக்கொழுந்து சிவராஜா, இமையாணன் உடுப்பிட்டி (மூதூர்)

வெளி மாவட்டத்தில் நியமனம் கிடைக்கப்பெற்றவர்கள் யாழ். கல்வி வலைய அலுவலகத்தில் நியமனங்களை பெற்றுக் கொள்ளலாம்

இந்நியமனங்கள் யாவும் 2. 1. 2001 தொடக்கம் வழங்கப்பட்டுள்ளன. (உ-9)

# சங்கீத, நடனத்துறைகளில் பெல்லூட் பயிற்சி நெறி

## தே. இ. சே. ம. ஏற்பாடு

(ஈச்சமோட்டை)

சங்கீதம், நடனம் போன்ற துறைகளில் பெல்லூட் பயிற்சி நெறியொன்றை யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆரம்பிக்கவிருக்கின்றது.

இணுவில் கந்தசாமி கோவில் அருகாமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறி இரண்டுவருட காலத்தைக் கொண்டதாகும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சங்கீத, நடன பாடங்களில் சித்தியடைந்தவர்களும், வட இலங்கை சங்கீதசபை, தரம் I ல் சித்தியடைந்தவர்களும் அல்லது நடனம் சங்கீதத்தில் பரம்பரையாக திறமை உள்ளவர்களும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப ஏற்பு இறுதிநாள் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதியாகும்.

விண்ணப்பங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட பணிமனைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (உ-59)

# ஜம்மு காஷ்மீர் சண்டை நிறுத்தம்

# மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் சண்டை நிறுத்தம் இன்னும்ஒரு மாதத்துக்கு நீடித்திருப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் உட்பட பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் நிதிஅமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர இன்னும் ஒரு மாதம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் பாகிஸ்தான் பயங்கரவாதத்துக்குத் துணைபோவதையிட்டு மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, லஸ்கரி தொய்பா போன்ற தீவிரவாதக் கும்பல்களை பாகிஸ்தான் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதமர் வாஜ்பாய் பேசுகையில் நிரந்தர அமைதி நிலவுவதற்காகத்தான் வன்முறைகள் நடந்தபோதும் இந்தியா மூன்றாம் முறை நீடித்திருக்கிறது என்று தெரிவித்தார். (து)

# இந்திய குடியரசுதினத்தில் அல்ஜீரியஸ் அதிபர்

(புதுடில்லி)

இந்திய குடியரசு தினப் பிரதமவிருந்தினராக அல்ஜீரியஸ் அதிபர் அப்துல் வா அஸீஸ் போக்விதா இம்முறை கலந்து கொள்ளுகிறார்.

இந்திய குடியரசு தினத்தில் அரபு நாடுகளைச் சேர்ந்த தலைவர் ஒருவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

ஐந்து அமைச்சர்கள் உட்பட அதிகாரிகளுடன் வந்திருக்கும் அப்துல்லா அஸீஸ் அவர்கள் ஆறு நாட்கள் இங்கு தங்கிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்கள்.

அல்ஜீரியஸ் நாட்டிற்கும் இந்தியாவிற்குமிடையே இரட்டை வரிவிதிப்புப்பற்றியும் மற்றும் பல பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிய ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட இருக்கின்றன. (து)

# பயணிகள் விமானத்தை கடத்தியவர் பிடிபட்டார்

## ஜேர்மனியில்சம்பவம்

(பேர்லின்)

ஜேர்மனியிலிருந்து 91 பயணிகளுடன் புறப்பட்ட விமானத்தை கடத்தியவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் விமானத்துக்குள் இருந்து விமான ஓட்டிகளைப் பயமுறுத்தியவர் அங்குள்ளவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார், என்றும், உடனே விமானம தரையிறங்கப்பட்டதென்றும் பயணிகள் யாவரும் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறோசிக்கு புறப்பட்ட இந்த விமானத்தில் அமெரிக்க தூதவர் ஒருவரும் இருந்தார்.

விமானத்தைக் கடத்தியவர் சதாம் ஹுஸைனின் ஆதரவாளர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## செய்திப்பரல்

★ கிரேக்கப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஞாயிறன்று நடந்தகுண்டு வெடிப்பில காயமடைந்தார்.

★ கொலம்பியாவில் 37 வருட உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அரசின் ஆலோசனைகள் கெரில்லாக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

★ இறந்த கொங்கோ ஜனாதிபதி கபிலாவின் இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

★ ஈரானுடனான உறவை வளர்க்க புஷ்ஷுக்கு தெஹ்ரான் அழைப்பு விடுத்துள்ளது.

## பாம்புப் புத்தாண்டில்

# சீனாவுடனான பகைக்கு தாய்வான் முடிவு

(பீஜிங்)

பாம்புப் புத்தாண்டில் சீனாவுடனான பகைமையை முடித்துக் கொள்ளப் போவதாக தாய்வான் அதிபர் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் எதிர்ப்புணர்வும் பகைமையும் கொண்ட காலம் மாறிவிட்டதென்றும் மனக்கசப்புகள் நீங்கி வருகிறதென்றும் தெரிவித்தார்.

நீரிணைக்கு அப்பால் உள்ள பிரச்சினையில் புதிய அணுகுமுறையுடன் தொடர இருப்பதாகவும் தெரிவித்தார்

இதேவேளை, இரு நாடுகளும் இணைந்து தொழிற்வளத்துறையில் முன்னேற முடியுமென்று சீனாவும், தாய்வானும் இணைந்த ஒரு அமைப்பாக மேம்பட முடியுமென்றும் தெரிவித்தார். (து)

## பிலிப்பைன்ஸ்

# முன்னாள் அதிபர் எஸ்ராடா நாட்டை விட்டு வெளியேறத் தடை

(மணிலா)

முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடா நாட்டை விட்டு வெளியேறுவதை அரசு தடுத்துள்ளது.

இது தொடர்பாக அவரதும் மனைவியினதும் வங்கிக் கணக்குகளில் பெருமளவு பணம் எடுக்கத்தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எஸ்ராடா பொருளாதாரத்தைச் சீர்குலைத்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதையடுத்து அவருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவைகளால் எஸ்ராடா விசாரணைக்குட்படுத்தப்பட இருக்கிறார் என்றும் அரசாங்க குற்ற இயல் விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

முன்னாள் அதிபர் எஸ்ராடா வரி ஏய்ப்புக் கொடுப்பதற்காகவே முறைகேடானவழிகளில் சொத்துகள் சேர்த்துள்ளார் என்பது கண்டு பிடிக்கப்பட்டதால் வெளிநாடுகளுக்கு செல்வது தடுக்கப்பட்டுள்ளது. (து)

## இந்தோனேஷிய,

# அதிபர்வாஹிட் மீதானஇறுதிமுடிவை பாராளுமன்றம் திங்களன்றுஎடுக்கும்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரகுமான் வாஹிட் பற்றிய இறுதி முடிவினைப் பாராளுமன்றம்திங்கள்அன்று முடிவெடுக்கும்.

அப்துல்ரகுமான் வாஹிட் மீது பல ஊழல்கள் இருப்பதாகவும் அதுபற்றி அவரிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டபொழுது பதில்சொல்ல மறுத்துள்ளதால் அவர்பற்றி பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றம் திங்கள் வழங்க இருக்கும் தீர்ப்பினால் அதிபர் வாஹிட்டுக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டால் ஆசியாவில் விசாரிக்கப்படும் இரண்டாவது அதிபராகதான் இருப்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார். (து)

# விளையாட்டு அரங்கு

## இங்கிலாந்து கிரிக்கெட் அணி 31ந் திகதி இலங்கை வரும்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இம்மாதம் 31ஆம் திகதி இலங்கை வருகிறது.

இலங்கை வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையே 3 டெஸ்ட் போட்டிகளும் 3 ஒரு நாள் போட்டிகளும் நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையே இதுவரை காலமும் ஒரு டெஸ்ட் போட்டியும் ஒரு நாள் போட்டியும் நடைபெறுவதே வழமை. ஆனால் இவ்விரு அணிக்கும் இடையில் கடைசியாக இங்கிலாந்தில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்றதனாலேயே இங்கிலாந்து அணி இலங்கை அணியுடன் முதன் முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்ற சம்மதம் தெரிவித்திருக்கிறது.

இப்போட்டிகளில் முதலாவது டெஸ்ட் போட்டி பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதை பந்தாட்டம்

சகாரா மில்லேனியம் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது. இப்போட்டிக்கு விளையாடுவதற்கு யூக்கோசிலாவியாவும் ஜப்பானும் தகுதி பெற்றிருக்கின்றன. [உ-9]

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டத்தினரால் ரூபவாஹினிக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இவ்வாண்டு நடத்தப்படவுள்ளது.

இதில் பன்னிரெண்டு பிரதேச சம்மேளன அணிகள் பங்கு பற்றி மோதவுள்ளன. 'செற்றப்' முறையில் நடைபெறவுள்ள இப்போட்டி இம்மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படுமெனவும்,

இதிலிருந்து மாவட்ட மட்டத்திற்குத் தெரிவாகும் அணிகள் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ - 59)

## கிரிக்கெட் போட்டி

[சுண்டிக்குளி]

வல்வெட்டித்துறை ஸ்பேஸ் விளையாட்டுச்கழகம் அதன் 35வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 20 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியினை யாழ் மாவட்ட ரீதியில் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் விளையாட்டு கழகங்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 28ம் திகதிக்கு முன்பதாக டாக்டர் ராதாகிருஷ்ணன் மெடிக்கல் கிளினிக் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [உ-110]

## உதைபந்தாட்ட உபகரணம்

[சுண்டுக்குளி]

இலங்கை உதைபந்தாட்ட சங்கம், உதைபந்தாட்டத்தில் இலங்கையின் தரத்தை மேம்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள 600 பாடசாலைகளை தெரிவுசெய்து அவற்றிற்கு உதைபந்தாட்ட உபகரணங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக டி.ஐ.ஜி. போதி லியனகே தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக மாத்தளை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 12பாடசாலைகளுக்கு உதைபந்தாட்ட உபகரணங்கள் கடந்த 20ம் திகதி அலுவிஹார விளையாட்டரங்கில் வைபரீதியாக வழங்கப்பட்டன. [உ-110]

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

[சுண்டுக்குளி]

யாழ். பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையே இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் செ. மாறன் நெறிப்படுத்தலில் யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ. எவ் ஜே றூபசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் சிறப்பு விருந்தினராக கிராமசேவையாளர் சுந்தரராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியில் குருநகர் யுத்காமல் விளையாட்டு கழக அணி அதனை எதிர்த்தாடிய பமிலியன் விளையாட்டுகழக அணியை 32:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி இவ்வருட சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

இவ்ஆட்டத்துக்கு நடுவர்களாக செல்வி. சேவியர் டிலானி, திருமதி தர்மகுலசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். யுத்காமல் அணி வீராங்கனைகள் செல்விகள் றெமின்டா, கெவின், யூலி ஆகியோர் வெகுசிறப்பாக ஆடி தமதுஅணிக்குபுள்ளிகளை பெற்றுக்கொடுத்ததுடன் ரசிகர்களின் பாராட்டுதல்களையும் பெற்றனர். (உ-110)

## ஆட்சிக்குழு தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியில் காலை 10 மணியளவில் அதன் தலைவர் கப்டன் டி எ.எம் குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் இடம்பெற்ற நடப்புவருடத்துக்கான ஆட்சிக்குழு, தெரிவு தற்காலிக தலைவர் கே. நாகேந்திரம் தலைமையில் நடைபெற்ற பொழுது கீழ் காண்போர் போட்டி ஏதுமின்று ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-
கப்டன் டி.எ.எம். குணசிங்கம்
செயலாளர்:-
கே. மனோகரன் பாலா
பொருளாளர்:-
எ. ஜெயராஜசிங்கம்
உப தலைவர்கள்:-
கே நாகேந்திரம்,வி.ரி.செல்வராஜா
உப செயலாளர்:-
ஆர். கேசவன்
நிர்வாக சபை உறுப்பினர்கள்
எஸ். அப்புத்துரை,எஸ். ரமணன்,கே முருகதாஸ், எஸ். செல்வசந்திரன், இ. துஷ்யந்தன்
பெண்களின் பிரதிநிதியாக:-
செல்வி ரி. நந்தகுமாரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-110)

தேறற்க யாரையும் தேராது
தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்
குறள்

# வலம்புரி

## இறுதிச் சந்தர்ப்பம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் ஒரு மாத காலத்திற்கு ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். நேற்று நள்ளிரவுடன் முடிந்த ஒருமாத கால யுத்தநிறுத்தத்தால் படைத்தரப்பில் நூற்றுக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும் அவ் யுத்தநிறுத்தம்சில வேளைகளில் விடுதலைப் புலி உறுப்பினர்களின் மரணத்திற்கு காரணமாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால் அதைப்பற்றியும் புலிகள் தரப்பு பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

மாறாகச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு களம் அமைப்பதாக, நல்நோக்குடன் ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தனர். இதற்கு அரச தரப்பிலிருந்து சாதகமானபதிலேதும் கிடைக்காமல் போனமை துரதிஷ்டமே.

புலிகளினால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தம் தமக்கு உத்தியோக பூர்வமாகக் கிடைக்கவில்லை என அரசதரப்பிலிருந்து தகவல்கள் வெளியிடப்பட்டன. அதேசமயம் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஊடாக யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கலாமென நெதர்லாந்துத் தூதுவரும் தம்மைச் சந்தித்த பதினொரு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறினார்.

இது சர்வதேசத்தின் எழுமாறான கருத்தாகக் கொண்டால், அதற்கும் சந்தர்ப்பம் வழங்கியது போல் விடுதலைப் புலிகள் மேலும் ஒரு மாத கால யுத்த நிறுத்தத்தை எரிக்சோல் மூலம் அரசிற்கு அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் மேலும் ஒரு மாத காலத்திற்கு அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தம் இனப்பிரச்சினைக்கு சமாதானதீர்வு காண்பதற்குரிய இறுதிச் சந்தர்ப்பம்என்பதில்எந்த ஐயமுமில்லை. இவ்விறுதிச் சந்தர்ப்பமும் நழுவிப் போனால் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லையென்பது சர்வ நிச்சயம்.

எனவே புலிகளால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தத்திற்கு இசைவாக அரசும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள சிங்களமக்கள் படையினரின் பெற்றோர், மனிதநேயஅமைப்புக்கள் ஒன்று திரண்டு ஒருமித்துக் குரல்கொடுக்க வேண்டும்.

---

மறைந்தார் மாண்பு

# நடனத்துறை வளர நற்பணியாற்றியவர்

# கலைச் செல்வர் அமரர் ஏரம்பு சுப்பையா

இலங்கை நடனப்பாரம்பரியத்திலே தனக்கென ஒரு தனியிடத்தைத்தக்கவைத்துக் கொண்ட ஒரு கலைஞர் அமரர் ஏரம்பு சுப்பையா அவர்கள். பெண்கள் நடனம் பயிலக்கூடாது, பார்க்கவும் கூடாது கௌரவமான குடும்பப் பெண்களுக்கு அது உகந்ததல்ல என்ற கருத்து நிலவிய ஒரு காலப்பகுதியில் தான் சுப்பையா அவர்கள் தனது கற்பித்தற் பணியை ஆரம்பிக்கின்றார்.

### தந்தையின் வழியில்

சுப்பையா அவர்களின் தகப்பனார் ஏரம்பு அவர்கள் ஒரு புகழ் பெற்ற அண்ணாவியார். யாழ்ப்பாணத்தில் சின்ன மேளமில்லாத காலத்தில் ஆந்திராவில் ஆடப்படும் யக்ஷகானம் போல் ஒப்பனை செய்து ஆடியும், 40 களின் முன் கூத்துப்பட்டறைகள் நடத்தியுமுள்ளார். அத்தோடு பல சபா நாடகங்களையும் மேடைப்படுத்தியுமுள்ளார். ஆகவே தகப்பனாரது கலையாற்றல் சுப்பையா அவர்களிடமும் இயற்கையிலேயே இணைந்திருந்தது. நடனக்கலை பற்றிய முன்னுக்குப்பின் முரணான பல கருத்துகள்நிலவிய காலப் பகுதியிற்தான் இந்தியக் கவிஞர் ரவீந்திர நாத்தாகூர் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து கலைகளின் மேன்மை பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் உரையாற்றுகின்றார். அவரது உரையினைச் செவிமடுக்கும் வாய்ப்பு கலைச்செல்வனுக்குக்கிடைக்கிறது. கவிஞரின் உரை, குடும்பப் பின்னணி வழங்கிய கலைத்திறன்களால் உந்தப்பட்டு 1940 ஆம் ஆண்டளவிலே இவர் தமிழகம் சென்று திருச்செந்தூர் மீனாட்ஷி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் செவ்வியல்நடன வடிவத்தினைக் கற்றார்.

### நடன ஆசிரியரானார்

பரத நாட்டியத்தில் தன் திறன்களை விருத்தி செய்து செழுமைப்படுத்திக் கொண்ட பின் 1946 தொடக்கம் 1948 வரை கேரளாவில் குருகோபிநாத்திடம் கதகளி நடனம் பயின்று அவரது பெரு மதிப்புப்பெற்ற சிஷ்யனாகத்திகழ்ந்தார். தனது கற்றல் செயற்பாட்டினை விருத்தி செய்து கொண்டு இலங்கை வந்த சுப்பையா அவர்கள் ஒரு முழுநேர நடனக்கலைஞராயும் தொழில் ரீதியான நடன ஆசிரியராகவும் செயற்படவித்திட்டு ஊக்கமளித்தவர் வீ.ஆர். இராஜநாயகம் அவர்களாவர். அதனால் அவர் 1948ல் யாழ்ப்பாணம் பறங்கித் தெருவிலாரம்பித்த நடனப்பள்ளியில் சுப்பையா தன்னை நடன ஆசிரியராக இணைத்துக்கொண்டு செயற்பட்டார். பெண்களை இத்துறையில் ஈடுபடுத்தும் பணியில் அவர் திறமையாக கடமையாற்றினார். நடனம் பயில வேண்டுமென்று உண்மையான ஆர்வங்கொண்ட பெண்களையும் தம் பிள்ளைகள் நடனம் கற்கவேண்டுமென்ற ஆவல் கொண்ட பெற்றோரையும் ஊக்குவித்து செயற்பட வைத்தது மட்டுமன்றி, சிலரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது வீடுகளுக்குச் சென்றும்நடனம் கற்பித்தார்.

**ச. விநோதினி**

### 'கலாபவனம்' மலர்ந்தது

கலைமீது ஆழ்ந்த பற்றும் பிடிப்பும் கொண்டசுப்பையா அவர்கள் தான் கற்றவைகளனைத்தையும் பிறருக்கு போதிக்கு முகமாகத் தன் வீட்டிலேயே ஒரு நடனக் கூடம் அமைக்க வேண்டுமென்பதைத்தன் லட்சியக்கனவாக மனதுள் வளர்த்திருந்தார். அவரது இந்தக்கனவு 1958 ஆம் ஆண்டிலே 'கலாபவனம்' என்ற நாமங்கொண்ட ஒப்பற்ற நடனப்பள்ளியாக நனவாக மலர்ந்தது. பின்னரிலே கலாபவனம் அரும்பெரும் நாட்டியக் கலைஞர்களை, ஆசிரியர்களை உருவாக்கியது.

### நாட்டிய நாடகங்கள்

கலாபவனம் மூலம் சுப்பையா அவர்கள் நடனக்கலைக்காற்றிய பணி மகத்தானது. நடன உருப்படிகள் மட்டுமே பிரபலமாயிருந்த அக்காலத்தில் அவர் நடன உலகிற்கு நடன நாடக மரபினை அறிமுகப்படுத்தினார். அவரது தயாரிப்புகளில் எல்லா அம்சங்களுமே அவரது பரதத்திற்கு அவசியமென இசை, உடைத்தெரிவு, நிறக்கொள்கை, ஆபரணங்கள், ஒப்பனை யாவுமே மிக எளிமையாக அதேசமயம் அழகுற எடுக்கின்ற கருத்துகளுக்குப் பொருத்தமாக அமைந்திருக்கும். சுகன்யா, அகலிகை, ஊர்வசி நந்தனார் போன்ற நாட்டிய நாடகங்களையும் கிராமிய நடனங்கள் பலவற்றையும் தயாரித்த பெருமை இவருக்குண்டு. இவரதுமாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசுகளை வென்றுள்ளனர்.

### வெளிநாட்டார் பாராட்டு

பல வெளிநாடுகளிலிருந்தும் நட்புறவுக்கலைஞர்களை வரவழைத்து பரதக்கலையின் மேன்மையையும் உன்னதத்தையும் காட்டிய பெருமையும்கூட கலாபவனத்திற்குண்டு. 1972 அளவில் ரஷ்ய தூதுவரும் அமெரிக்க கலைஞர்குழு ஒன்றும் கலாபவனத்திற்கு விஜயம் செய்ததுடன் கலைச்செல்வன் அவர்களது பணிகளைப் பாராட்டியமையும் இங்கு குறிப்பிடத்தகுந்தது.

### மனம் லயித்தோர் பலர்

மரபை மீறாத வகையில் பக்திசார்ந்த தெய்வீக உணர்வும் ஆத்மீக சிந்தனையுங் கொண்டதாகவே இவரது நடனப்பணி அமைந்திருந்தது. நடனத்தில் ஒரு சிறு பகுதியோ அல்லது ஒரு உருப்படியேனும் இவரிடம் பயில வேண்டும் என்பது அந்நாளையக்கலைஞர்கள், மரணவர்களின் பெரு விருப்பாயிருந்தமையிலிருந்து இவரது ஆற்றலை உணரமுடிகிறது.

'மாணவர்களின் தன்மை தராதரத்திற் கேற்றமாதிரி நன்றாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு நிகர்அவரே. அத்தோடு தனக்கு திருப்தி வரும்வரையும் பூரணத்துவம் பெறும்வரையும் புதிய பாடத்துக்குச் செல்லமாட்டார். கடுமையான பயிற்சி, ஒழுங்கு என்பன அவர் எம்மிடம் எதிர்பார்க்கின்ற அம்சங்கள்' அவரது ஒரு மாணவி நினைவு கூர்கையில், நடனத்தோடு சம்பந்தமில்லாத ஒருவர்-

'வேம்படியில் நாம் கல்வி பயிலும் காலப்பகுதியில் அங்கே நடன ஆசானாக சுப்பையா அவர்கள் இருந்தார். அவர் ஜதி சொல்லும் ஸப்தம் கேட்டதுமே நானும் வேறு சிலரும் அங்கே ஓடிவிடுவோம் நாம் நடனம் பயிலாவிட்டாலும் அவர் சொல்லிக்கொடுப்பதையும் தானே செய்து காண்பிப்பதையும் பார்ப்பதில் எமக்கு மிகுந்த ஆசை. அலையலையான தலைமுடி காற்றிலசைய இறைவனே வந்துநின்று ஆடுவதுபோன்ற நினைவில் நாம யாவும்மறந்து அதில் லயித்ததை என்னால் மறக்கவே முடியாது' என்று கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### புதல்விகளின் கலைப்பணி

இவரிடம் பயின்றபலர் இன்று புகழ்பெற்ற தொழில் ரீதியாகவும் கலையார்வம் காரணமாக பயின்றவர்களும் இவர் பெயர் சொல்லும்படி நடனத்துறைக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இலங்கையிலும் பல வெளிநாடுகளிலும் இன்றும் கூட பணிசெய்து வருகிறார்கள். தந்தைவழி தொடர்ந்து இன்று கலாபவனத்தில் 150க்கும் மேற்பட்ட மாணவர்க்கு நடனம் பயிற்றுவிப்பதுடன் தந்தையின் பணியை தொடர்ந்தும் ஆற்றிவருகிறார் அவரது மூத்த புதல்வியான திருமதி சாந்தினி சிவநேசன். இவர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலூரியில் விரிவுரையாளராக பணிபுரிகிறார். மற்றைய இரு புதல்வியரும் கனடாவிலும் சுவிஸிலும் நடனம் கற்பித்து அக்கலைக்குத் தம்மாலியன்ற பணிகளை செய்து வருகின்றார்கள்.

---

# சாயி அருளமுதம்



மனிதர்களைக் கீழே நோக்கி சாயியை அண்ணாந்து பார்க்கும் போது உங்களுக்கு இறையருள் கிடைக்குமென நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். உங்கள் நடை, உடை, பாவனை ஆகியன உங்கள் குணாகுணத்தையும், மற்றவர்கள் பாற் கொண்டுள்ள மனோபாவத்தையும் வெளிப்படுத்தி விடுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் இனிமையான, இதமான பேச்சையே நாவில் கொண்டிருங்கள். புனிதக் காட்சிகளிலேயே உங்கள் பார்வையைச் செலுத்துங்கள். தூய்மையான, எளிமையான உடைகளை அணிவதுடன், புதுமையான உடைகளிலும், நவநாகரிகத்திலும் தம் மனதைப் பறிகொடுப்போரைப் பின்பற்றாதீர்கள். சாதாரண மனிதனிலிருந்து இவ்வளவு தூரத்திலிருந்து கொண்டு நீங்கள் எவ்வாறு சேவை செய்ய முடியும்? நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை ''உங்கள் எஜமானரைப் பின்பற்றுங்கள்'' என்பதேயாம். இங்கு நான் ''எஜமானர்'' எனக் குறிப்பிடுவது உங்களுக்குள்ளேயிருக்கும் மனச்சாட்சியையே. கடவுளின் குரல் அதுதான்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை.

---

யாழ் மாநகரசபை

# சுகாதார குழுக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றம்

(ஈச்சமோட்டை)

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பொதுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று யாழ். மாநகர சபைப் பகுதியில் பிரதிமேயர் செல்லன் கந்தையன் தலைமையில் கூடியது.

இதில் சுகாதார விடயங்கள் தொடர்பாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அவற்றில் முக்கியமானதீர்மானங்களாக

★ சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கம்பூஸ், கையுறைகளை அவர்கள் பாவிக்காது வேலையில் ஈடுபடின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ மானிப்பாய் வீதி, நாவலர்வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி, கடற்கரைவீதி, ஆனைப்பந்தி வீதி, பிரப்பங்குளம் ஒழுங்கை, தந்தை செல்வாபுரம், முஸ்லிம் வீதிப்பகுதி போன்றவற்றை உடனடியாக துப்பரவுசெய்வதோடு வடிகால்களும் அமைக்கப்படும்.

★ பிரப்பங்குள ஒழுங்கை வெள்ளவாய்க்கால் பகுதி உடன் அணைக்கட்டு இடப்பட்டு அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு உரியபாதை வசதியை ஏற்படுத்தல்.

★ தந்தை செல்வாபுர கந்தசாமி விளையாட்டு அரங்குப் பகுதிக்காக 5பரப்பு விஸ்தீரணமுள்ள கடற்பகுதியை துப்பரவு செய்தல்.

போன்றமுக்கிய தீர்மானங்கள் மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணத்தால் முன்வைக்கப்பட்டு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இதில் மாநகரசபை உறுப்பினர்கள் மனுவல் மங்களநேசன், எட்வட் உட்பட பல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(உ-59-12)

## கருத்தரங்கு

(சங்கானை)

பண்டத்தரிப்பு வடலியடைப்பு, பகுதியில் உள்ள இளைஞர்யுவதிகளின் வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடர்பாகஆராயும் கருத்தரங்கு ஒன்றினை சண்டிலிப்பாய்பிரதேச செயலக அதிகாரிகள் ஒழுங்கு செய்துள்ளனர்.

(உ-ப-18)

# சமாதானம் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை

## அஞ்சலியுரையில் விக்ரர் ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் மூன்றாம் மாத நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று கொழும்பு சமூக சமய கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

சீதாரஞ்சினி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் 'ராவய' சிங்கள வார இதழ் ஆசிரியர் விக்ரர்ஐவன் அஞ்சலியுரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில்: இன்று நாம் வன்முறை நிறைந்தவொரு சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ் வன்முறைகளை எதிர்க்கின்ற சமூக அமைப்பு எப்பொழுது உருவாகின்றதோ அப்பொழுது தான் சமாதானம் உருவாகும் சூழ்நிலை ஏற்படும். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சமாதானச் சூழல் இப்போது ஏற்பட வாய்ப்பே இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## சர்வதேச நாணயக் குழு விரைவில் இலங்கை வரும்

சர்வதேச நாணய நிதிய விசேட குழு அடுத்த வாரமளவில் இலங்கை வரஉள்ளது.

அவசர செலவீனங்களைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் இரண்டாயிரத்து 500 கோடி ரூபாவினை வர்த்தகக் கடனாக கோரி இருந்ததுடன், வரவு செலவு திட்டத்தை சமர்பிப்பதற்கு முன்னதாக இந்த உதவி கிட்டினால் மட்டுமே ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க கூடியதாக இருக்கும் என்றும் இலங்கை அரசு, நாணய நிதியத்திடம் தெரிவித்துள்ளது. (உ-9)

## தையல் பயிற்சி வகுப்பு

வடக்கு கிழக்கு மாகாண கிராமஅபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் கட்டப்பிராய் மாதர் கிராமஅபிவிருத்திச்சங்கத்தில் இன்று தையல்டிப்ளோமாப் பயிற்சிநெறி ஆரம்பமாகின்றது.

சங்கத் தலைவி திருமதி கருணாமூர்த்தி சத்தியேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கோப்பாய்பிரதேச செயலர் க.தேதீஸ்வரன் நிர்வாக உத்தியோத்தர் க.வல்லிபுரம் ஜே|259கிராம உத்தியோகத்தர் எஸ். முத்துக் குமாரசாமி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## விளையாட்டு போட்டி

கோப்பாய் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு வித்தியாலய அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகவும், வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், உப தலைவர் யு.எல் ஏ. ரவி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செல்வி வி.வேலுப்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

### புலிகளை--

துடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படுவது அவசியமாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்யும் விடயம் முற்றுமுழுதாகத் தவிர்க்கப்பட வேண்டுமென்பதே 47 மனித நேய அமைப்புக்களின் ஒருமித்த கருத்தாகும்.

புலிகள் அமைப்பை தடை செய்வது சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிப்பதுடன் ஆயுத மோதலை மேலும் வலுப்பெறச் செய்யும். எனவே இதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தொண்டர்---

பாக எந்தவிதஅரசியல் தலையீடுகளும் இடம் பெற அனுமதிக்க மாட்டேன் என்றும் கல்வி அமைச்சர் உறுதிபடக் கூறியுள்ளார். (வி)

### முகமாலைப்..

கினிகிர – 9 இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்ட படை நகர்வில் கைப்பற்றப்பட்ட முகமாலைப் பகுதிகளில் ரோந்துப் பணியிலும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணியிலும் ஈடுபட்டிருந்த வேளையிலே இக் கண்ணி வெடிச் சம்பவம் இடம் பெற்றதாகக் தெரிவிக்கப்படு கிறது.

காயமடைந்த படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (வ-9)

### விளக்க---

கொலை செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயின் மரணம் தொடர்பான மரண விசாரணை நேற்றுமுன்தினம்சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில்இடம்பெற்றது

இக்கொலை வழக்கின்சந்தேகநபர்களான வித்தியானந்த ,விஜயகுமாரணதுங்க ஆகிய இருவரையும்எதிர்வரும் 6ந்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-4-43)

### பகிஷ்கரிப்பு---

போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அரசு விடுதலைப் புலிகளுடன்யுத்தநிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்கக் கோரியும், அரசிற்கு சர்வதேச அழுத்தத்தைக் கொடுக்கக் கோரியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இப் பகிஷ்க்கரிப்புப் போராட்டத்தைதொடரப்போவதாக அப்பிரதேச மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள் (ந-5)

## படையினர் சோதனை

நேற்று புதன்கிழமை காலை 9,30 மணிமுதல் ஆனைக் கோட்டை சந்தியில் வீதித் தடை அமைத்து படையினரால் சோதனை யிடப்பட்டன. (உ-ப-18)

## மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்சி.மாதவகுமார் கலந்து கொள்வார். (இ)

### அரசியல்--.

அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து விடுதலைப் புலிகள் மேலும் ஒருமாத கால யுத்த நிறுத்த அறிவிப்பை ஒருதலைப்பட்சமாகவே அறிவித்துள்ளனர்.

புலிகளின் இவ் அறிவிப்பு சமாதானத்திற்கான நல்லெண்ண முயற்சி எந்தளவுக்குப் பலனளிக்கும் என்பதில் அரசியல் ஆய்வாளர்கள் கண்ணும் கருத்துமாக வுள்ளனர்.

**எரிக்சோல்ஓரிரு தினங்களில் வருவார்?**

உத்தியோக பூர்வமாக யுத்த நிறுத்த அறிவிப்பை இலங்கை அரசுக்கு தெரிவிப்பதற்காக இன்னமும் ஓரிரு தினங்களில் நோர்வேயின் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை அடுத்தே இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றி ஜனாதிபதிசந்திரிகாநோர்வே தூதுவரிடம் எடுத்து கூறுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை புலிகளின் யுத்த நிறுத்தத்தை அடுத்து இலங்கை அரசிற்கு சர்வதேச அழுத்தம் எந்த வடிவிலும் வரலாம் என்றும் அதற்கேற்ற வகையில் இலங்கை அரசின் உத்தியோக பூர்வ யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியாகலாம் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பு சமாதான முயற்சியில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக உள்ளதெனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை புலிகளின் யுதத நிறுத்தம் தொடர்பாக தமிழ்த் தலைவர்கள சுவீடன் தூதுவரையும் நேற்று சந்தித்து பேச்சு நடத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும். [வ]

## ஆலயமண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதிவீதி புனித சின்னப்பர் ஆலய மண்டபத் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

வண.பிதா றெஜிஸ் இராஜநாயகம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜனும், சிறப்பு விருந்னராக நல்லூர் உதவி அரச அதிபர் வேல்முருகான்பிள்ளையும், கௌரவ விருந்தினராக எஸ்.சாந்தமோகனும் கலந்து கொள்ளுவர். (ந)

## நிதி அமைச்சின் செயலாளர் இராஜினாமா

(கொழும்பு)

நிதி அமைச்சினதும் திறைசேரியினதும் செயலர் கலாநிதி ரி.வி.ஜெயசுந்தர தனது பதவியிலிருந்து இராயினாமா செய்ய முடிவெடுத்துள்ளார்.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி கட்கு திறைசேரியின் செயற்பாடும் காரணம் என்று வர்த்தக சமூகத்திலிருந்து மாத்திரமன்றி அரச தரப்பில் இருந்தும் முறைப்பாடு வருவதால் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என ஊகங்கள் வெளியாகியுள்ளன. (உ-9)

## பெப்· 5 வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற எட்டுப் பேரது படுகொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் 14 பேரும் நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை அடுத்த மாதம் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ-23)

### 1(தமிழ்-.

தெரிவிததுள்ளன.

சமாதானத் தீர்வு முயற்சியில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை போக்குவதற்கும் சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யவும். உடனடி யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானத்தை நிலைநாட்டுவதே இந்தக்கூட்டமைப்பின் நோக்கமாகும்,

இக்கூட்டமைப்பை அரசியல் கட்சிகளில் செய்வதுடன் எதிர்காலத்தில் நடைபேறவுள்ள தேர்தல்களில் போட்டியிடவும் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)


அருவளர்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்
நூதன பிரதிஷ்டா

**மகா கும்பாபிஷேகம்**

மருதனார்மடம் சந்திக்கருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அருவளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் நூதன பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம்

29-01-2001 திங்கட்கிழமை
காலை 7 மணி தொடக்கம் 8.33 வரை நடைபெறும்.

எண்ணைக் காப்பு

சாத்தும் வைபவம் 26, 27 திகதிகளில் (வெள்ளி, சனிக் கிழமைகள்) காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும்.

சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள்
இணுவில், தர்ம கர்த்தா
சுன்னாகம்.
(கி/1914)



கணக்கீடு
**எஸ். தவா**
**2001**
பங்குடமை
முடிவுக் கணக்கு
திங்., புதன், வெள்ளி
6 - 30 A. M
**2000**
கிரயக் கணக்கீடு
Day Class
திங்., புதன், வெள்ளி
7 - 30 A.M.
**திகழ்**
கல்வி நிறுவனம்
இணுவில்.
(கி/1911)



**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
விஜய், தேவயானி
சூர்யா
நடித்த
**"ப்ரண்ஸ்"**
10-15 (ப. நே)
2-15 (ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(கி/1910)



வடமராட்சி கிழக்கு
இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்க
**அங்குரார்ப்பணக் கூட்டம்**

இடம்:- வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகம் தும்பளை.

காலம்:- 27 - 01 - 2001 காலை 11 மணி

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல பாகங்களிலும் பரந்து வாழும் நலன் விரும்பிகள் அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

அமைப்புக் குழு
(கி/1915)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.